**தலைப்பு 225 - பொலிஸ் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 225- பொலிஸ் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 யூன் 27 ஆந் திகதி பொலிஸ்மா அதிபருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 63,604.89 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 58,852.28 தொகை மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடுகளில் ரூபா 4,752.61 மில்லியன் அல்லது 7.47 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 58,548.50 | 55,802.51 | 2,745.99 | 4.69 |
| மூலதனம் | 5,056.39 | 3,049.77 | 2,006.62 | 36.68 |
| **மொத்தம்** | 63,604.89 | 58,852.28 | 4,752.61 | 7.47 |

**2.2. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 22501 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளபடியானது** |
| **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா.மில்லியன்** | **ரூபா. மில்லியன்** |
| 1,200.00 | 1,034.30 | 1,350.00 | 1,413.30 | 2,000.00 | 1,384.99 |

**2.3 கட்டுநிதிக் கணக்கு**

2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு திணைக்களத்திற்குரிய 7002/0000/00/0031/0016/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் மீதி ரூபா 1.02 மில்லியனாகக் காணப்பட்டது.

**2.4 பொது வைப்புக் கணக்குகள்**

திணைக்களத்தின் கீழான 4 வைப்புக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 337.31 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **வைப்புக் கணக்கு இலக்கம்** | **2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
|---|---|
| | **ரூபா. மில்லியன்** |
| 6000/0000/00/0001/0062/000 | 9.78 |
| 6000/0000/00/0013/0050/000 | 29.81 |
| 6000/0000/00/0016/0032/000 | 296.55 |
| 6000/0000/00/0018/0040/000 | 1.17 |
| மொத்தம் | 337.31 |

**2.5 கணக்காய்வு அவதானிப்பு**

பொலிஸ் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. ஒதுக்கீட்டுக் கணக்கு

### 3.1 பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 03 செலவின விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 583 மில்லியன் கூட்டுத்தொகையான நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தன.

(ஆ) 12 செலவின விடயங்களுக்கு மிகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததன் காரணமாக நிதியேற்பாடுகளைப் பயன்படுத்திய பின்னர் அச் செலவின விடயங்களுக்கான சேமிப்பானது அத்தகைய செலவின விடயங்களுடன் தொடர்புடைய தேறிய நிதியேற்பாடுகளில் 14 சதவீதம் முதல் 78 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

### 3.2 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2 வருடங்களிற்கு மேற்பட்ட ரூபா 11.5 மில்லியனான வைப்பொன்று தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஓய்வூதிய திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஓய்வூதிய நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 0.64 மில்லியன் தொகை உரிய செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமல் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

### 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

22501 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவையாகவுள்ள மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 113.13 மில்லியனாக இருந்தது. இந் நிலுவை கடன் மீதிகளில் 4,616 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் ரூபா 72.24 மில்லியன் கூட்டுத்தொகையான நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதற்கு பொலிஸ் திணைக்களம் தவறியிருந்தது.

(ஆ) திணைக்களத்தின் கடன் கட்டுப்பாட்டுக் கணக்கின் கடன் மீதி மற்றும் வட்டார அலுவலகங்களினால் தயாரிக்கப்பட்டிருந்த தனியாள் மீதி வகைப்படுத்தலின் பிரகாரம் கடன் மீதிகளுக்கு இடையே இனங்காணப்படாத ரூபா 3.84 மில்லியனான வேறுபாடு காணப்பட்டது.

(இ) பொலிஸ் திணைக்களத்தின் புத்தகங்கள் மற்றும் திணைக்கள பதிவேடுகளுக்கு இடையே ரூபா 140,890 ஆன வேறுபாடு காணப்பட்டது.

(ஈ) 2010 ஆம் ஆண்டின் போது திருகோணமலை பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் இடர் கடனுக்கு விண்ணப்பித்த 16 பொலிஸ் உத்தியோகத்தர்களின் கடன் விண்ணப்பங்கள் மோசடியான முறையில் மாற்றப்பட்டு ரூபா 1.27 மில்லியன் பெறுமதியான காசோலைகளைப் பெற்றுக்கொண்டு தவறாகப் பயன்படுத்தியது தொடர்பாக நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததுடன் அதன் தற்போதைய நிலைமை தொடர்பாக கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

(உ) பொலன்னருவ பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தின் மூலம் 2012 யூன் மாதம் முதல் 07 உத்தியோகத்தர்களுக்காக ரூபா 1.22 மில்லியன் இடர்கடன் வழங்கப்பட்டிருந்தது. அக்கடன்களைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்கள் மற்றும் கடன் மீதிகள் தொடர்பாக சிக்கலான நிலைமையொன்று உருவாகியிருந்தது. குற்றத் தடுப்பு திணைக்களத்தின் மூலம் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதன் தற்போதைய நிலைமை தொடர்பாக கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

**3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் பொலிஸ் திணைக்களத்தினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் வருடாந்த செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வறிக்கை 2017 யூன் 30 வரையிலும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணம் 756 இன் பிரகாரம் நடாத்தப்பட வேண்டிய வருடாந்த பொருள் மெய்மையாய்வு மீளாய்வாண்டிற்காக மேல் மாகாண மற்றும் வட மாகாணத்தில் 2017 யூலை மாதம் இறுதி வரையிலும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**3.6 செயலாற்றல்**

2016 ஆம் ஆண்டிற்கான பொலிஸ் திணைக்களத்தின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) குற்றங்களை தீர்வுசெய்வதன் முன்னேற்றம்

சகலவிதமான குற்றங்கள், சட்ட விரோத செயற்பாடுகள் மற்றும் பொது மக்கள் சமாதானத்தை சீர்குழைக்கும் விடயங்களைத் தவிர்த்தல் பொலிஸ் திணைக்களத்தின் பிரதான செயல் பணியாக இருந்தது. அதற்குள் குற்ற அறிக்கைகளில் தீர்வுசெய்யப்பட்ட மற்றும் அறிக்கையிடப்பட்ட குற்றங்களை தீர்வுசெய்வதற்கு ஒப்பான பெறுமதி திணைக்களத்தின் முன்னேற்றத்தை பிரதிபலிக்கும் பிரதான குறிகாட்டியாக இருந்தன. அதற்குரித்தாக மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| குற்றங்களின் வகை | 2016 ஆம் ஆண்டு | | | 2015 ஆம் ஆண்டு | | |
|---|---|---|---|---|---|---|
| | அறிக்கை யிடப்பட்ட | தீர்த்து வைத்தல் | தீர்த்து வைத்தல் சதவீதம் | அறிக்கை யிடப்பட்ட | தீர்த்து வைத்தல் | தீர்த்து வைத்தல் சதவீதம் |
| குற்றங்கள் சிறிய தவறுகள் | 36,937 | 26,869 | 72.74 | 40,188 | 23,575 | 58.66 |
| ஆட்களுக்கு எதிராக சிறிய தவறுகள் | 45,579 | 30,481 | 66.87 | 43,870 | 30,292 | 69.05 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆதனங்களுக்கு எதிராக | 33,349 | 15,969 | 47.88 | 30,685 | 14,407 | 46.95 |
| சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள் | 5,709 | 3,294 | 57.70 | 5,911 | 5,102 | 86.31 |
| பெண்களுக்கு எதிரான குற்றங்கள் | 9,042 | 4,986 | 55.14 | 8,288 | 4,579 | 55.25 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) குற்றங்களைத் தீர்வுசெய்தலின் செயன்முன்னேற்றம் சந்தேக நபர்களை கைது செய்தலின் பேரில் இனங்காணப்பட்டுள்ளதுடன், சிறிய தவறுகளை தீர்வு செய்வதின் முன்னேற்றம் பொலிஸ் இணக்கச் சபை அல்லது வழக்குத் தொடருதல் என பூர்த்தி செய்யப்பட்ட அளவின் பேரில் இனங்காணப்பட்டுள்ளது. ஒரு வருடத்தில் பொலிஸ் நிலையங்களுக்கு செய்யப்படும் ஒரு மில்லியனை விஞ்சிய சிறிய முறைப்பாடுகள் தீர்வுசெய்தலின் முன்னேற்றம் 95 சதவீதத்தை விஞ்சியிருந்த போதிலும் குற்றங்கள் மற்றும் சிறுதவறுகள் என்பவற்றை தீர்வுசெய்தல் மேற்குறித்த படி குறைந்த முன்னேற்றத்தைக் காண்பித்தது.

(ii) முன்னைய ஆண்டில் தீர்வுசெய்யப்படாத முறைப்பாடுகள் தொடர்பாக தகவல் முன்கொண்டு வரப்படும் நடைமுறையொன்று இல்லாதிருந்தமையால் முன்னைய ஆண்டில் அறிக்கையிடப்பட்ட முறைப்பாடுகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளபடியாக தீர்வுசெய்யப்படாத முறைப்பாடுகளின் எண்ணிக்கை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்குரிய தீர்வுசெய்யப்படாத குற்றங்கள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கையும் பலவீனமாக இருந்தது.

**(ஆ) போக்குவரத்து நிர்வாகமும் வீதிப் பாதுகாப்பும்**

போக்குவரத்து நிர்வாகம் மற்றும் வீதிப் பாதுகாப்பு என்பவற்றை தாபித்து விபத்துக்களை தவிர்த்தல் பொலிஸ் திணைக்களத்தின் பிரதான செயற்பாடாக இருப்பதுடன் இலங்கையில் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் பதிவாகியுள்ள வீதி விபத்துக்கள் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| | **2016** | **2015** |
|---|---|---|
| கோர விபத்துக்களின் எண்ணிக்கை | 2,824 | 2,600 |
| கடுங் காயங்கள் ஏற்படுத்திய விபத்துக்களின் எண்ணிக்கை | 8,148 | 8,186 |
| சிறு காயங்கள் ஏற்படுத்திய விபத்துக்களின் எண்ணிக்கை | 14,604 | 13,595 |
| சேதங்களை ஏற்படுத்திய விபத்துக்களின் எண்ணிக்கை | 13,380 | 13,726 |
| மொத்த விபத்துக்களின் எண்ணிக்கை | 38,956 | 38,107 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கோர விபத்துக்களில் இறந்தவர்களின் எண்ணிக்கை 2015 ஆம் ஆண்டின் போது 2816 ஆக இருந்ததுடன், 2016 ஆம் ஆண்டின் போது 3017 வரை அதிகரித்திருந்தது.

(ii) 2014, 2015 மற்றும் 2016 ஆகிய மூன்று ஆண்டுகளில் கோர விபத்துக்கள் நூறைத் தாண்டிய பொலிஸ் வட்டாரங்களாக அநுராதபுரம், குருணாகல,

கம்பஹா, களணி மற்றும் இரத்தனபுரியில் பதிவாகியிருந்தன. கண்டி, நுகேகொட, மாத்தறை, தங்காலை ஆகிய பொலிஸ் வட்டாரங்களில் 2016 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்டிருந்த பயங்கர வாகன விபத்துக்களின் எண்ணிக்கை நூறைத் தாண்டியிருந்தது.

(iii) 2014, 2015 மற்றும் 2016 ஆகிய 3 ஆண்டுகளில் 08 பொலிஸ் வட்டாரங்களில் பயங்கரமான வாகன விபத்துக்களின் எண்ணிக்கை முன்னூறினை தாண்டியிருந்தது. 41 பொலிஸ் வட்டாரங்களுக்கு இடையே அந்த 08 பொலிஸ் வட்டாரங்களுக்குள் இடம்பெற்றிருந்த பயங்கரமான வாகன விபத்துக்களின் சதவீதம் மொத்த பயங்கரமான விபத்துக்களுக்கு ஒப்பாக முன்னைய ஆண்டின் போது 39.5 சதவீதத்திலிருந்து மீளாய்வாண்டின் போது 43.8 சதவீதம் வரை அதிகரித்திருந்தது.

(iv) மீளாய்வாண்டின் போது இடம்பெற்றிருந்த சந்தேக நபர்கள் இனங்காணப்படாத போக்குவரத்து விபத்துக்கள் (விபத்துக்குகளை ஏற்படுத்தி விட்டு தப்பிசென்ற) எண்ணிக்கை 2097 ஆக இருந்தது. அதில் கோர விபத்துக்கள் 81 ஆக இருந்ததுடன் பயங்கர விபத்துக்களின் எண்ணிக்கை 168 ஆக இருந்தது.

**(ஈ) அறிக்கையிடப்பட்ட சட்டவிரோத போதைப் பொருட்களும், கைது செய்தல் மற்றும் வழக்கு தொடருதலும்**

நாட்டில் சட்ட விரோத போதைப் பொருள் (ஹெரோயின், கஞ்சா, கொக்கேன், ஒபியம் மற்றும் ஏனையவை) பொலிஸ் போதைப்பொருள் பணியகம் மற்றும் பொலிஸ் நிலையங்கள் தொடர்பாக கடந்த 2 வருடங்களுக்கான தரவுகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **நிறுவனம்** | **கைப்பற்றப்பட்ட கிலோ கிராம் (Kg) அளவு பொருள்** | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | **ஹெரொய்ன்** | | **கஞ்சா** | | **ஹசிஸ்** | | **கொக்கேன்** | |
| | **2015** | **2016** | **2015** | **2016** | **2015** | **2016** | **2015** | **2016** |
| பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகம் | 22.62 | 147.73 | 196.32 | 108.32 | - | 4.69 | - | 1,486.30 |
| பொலிஸ் நிலையங்கள் | 16.61 | 48.72 | 5,481.14 | 3,531.82 | 1.29 | 35.61 | 0.19 | 1.55 |
| மொத்தம் | 39.23 | 196.45 | 5,677.46 | 3,640.14 | 1.29 | 40.3 | 0.19 | 1,487.85 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் போது பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்தினால் கைப்பற்றப்பட்டிருந்த கொக்கேன் இருப்பின் மொத்த விலையின் சராசரி பெறுமதி ரூபா 22,294.5 மில்லியனாக இருந்தது.

(ii) ஹெரொய்ன் போதைப் பொருள் தொடர்பாக கைப்பற்றப்பட்ட அளவு முன்னைய ஆண்டில் 26,539 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது 27,458 வரை அதிகரித்திருந்தது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மற்றும் ஹெரொய்ன் அளவு அதிகரிப்பதன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக நாட்டில் சுழற்சியில் இருந்த அளவு அதிக பெறுமதியைக் கொண்டிருந்தன.

மீளாய்வாண்டில் கைப்பற்றப்பட்ட அளவின் மொத்த விலையில் சராசரி பெறுமதி ரூபா 982.25 மில்லியனாக இருந்தது.

**3.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நாரஹேன்பிட்டி பொலிஸ் வைத்தியசாலையின் 01 ஆம் இலக்க மருந்துக் களஞ்சியத்தில் ரூபா 483,899 பெறுமதியான 152 மருந்து உருப்படிகள் மற்றும் பெறுமதி வெளிப்படுத்தப்படாத மேலும் 85 மருந்து உருப்படிகள் காலாவதியான மருந்துகளாக களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. மேலும், அவை பயன்பாட்டிற்கு எடுக்கப்படும் மருந்துக் களஞ்சியத்தினுள்ளே களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) பொலிஸ் வைத்தியசாலையில் நாளாந்த கொள்வனவு பிரிவினால் குறிப்பாக பெயர் குறிப்பிடப்பட்ட நோயாளிகளுக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 753,789 ஆன மருந்துகள் 03 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், குறித்த நோயாளிகள் அவற்றை எடுத்துச் செல்லாமையால் நாளாந்த கொள்வனவு களஞ்சியத்தில் 2017 மார்ச் 31 ஆந் திகதி வரை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**3.8 முகாமைத்துவ நலிவுகள்**

**பொலிஸ் மருத்துவ சேவைகள் வட்டாரம்**

பொலிஸ் மருத்துவ சேவைகள் வட்டாரம் தமது செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பல்வேறு வகையான 23 பிரிவுகளின் கீழ் செயற்படுத்தப்படுவதுடன் வைத்தியசாலையின் உள்ளக செயற்பாடு, மருந்து நிர்வாகம் மற்றும் பொதுவான நிர்வாகம் என இரண்டு பிரதான பகுதிகளின் கீழ் செயற்படுகின்றது. மருந்து நிர்வாகம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மருந்து நிர்வாகத்தின் உள்ளகக் கட்டுப்பாடு மிகவும் பலவீனமாக நிலைமையில் காணப்பட்டது. பொலிஸ் வைத்தியசாலைக்காக மருந்துப் பொருட்கள் மற்றும் சிகிச்சை உபகரணங்கள் கொள்வனவு விநியோகம் மற்றும் களஞ்சியப்படுத்தல் என்பன பலவீனமான மட்டத்தில் காணப்பட்டமையால் 2016 யூன் 30 ஆந் திகதி வைத்தியசாலை பதவியணியின் உத்தியோகத்தர்களால் ரூபா 611,552 ஆன 40 மருந்து உருப்படிகள் களவாடப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் போது ரூபா 286.7 மில்லியனான மருந்துகள் பொலிஸ் வைத்தியசாலைக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் மருந்துகளை களஞ்சியத்திற்கு கட்டளையிடல், மருந்து இருப்புக்கள் பெற்றுக்கொள்ளல் மற்றும் மருந்துகளை நோயாளிகளுக்காக வழங்குதல் போன்ற பிரதான செயற்பாடுகளுக்காக பேணப்பட வேண்டிய பதிவேடுகள் நாளாந்தம் நாளதுவரையாக்கல் மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது.

**3.9 செயற்திட்டத்தை அமுலாக்கலில் பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசிய பொலிஸ் கல்விப் பீடத்தை அபிவிருத்தி செய்வதற்காக மீளாய்வாண்டின் போதும் முன்னைய 02 ஆண்டுகளின் போதும் ரூபா 1,374 மில்லியனான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதற்காக ரூபா 131 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதில் தாமதப்படுத்தப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டின் போது தேசிய பொலிஸ் கல்விப் பீடத்தை அபிவிருத்தி செய்தலின் கீழ் கட்டான தேசிய பொலிஸ் பயிற்சி நிலையத்தினதும் களுத்துறை பொலிஸ் பயிற்சி கல்லூரி பாடசாலையின்

நிர்வாகக் கட்டிடம், விடுதிகள், விளையாட்டரங்கு மற்றும் கேட்போர்கூடம் மற்றும் உள்ளக வீதிகள் நிர்மாணம் உட்பட 16 செயற்திட்டங்கள் திட்டமிடப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் போது அச்செயற்திட்டங்களை செயற்படுத்தப்படாமல் இருந்ததுடன், ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 800 மில்லியனான நிதியேற்பாடுகளில் ரூபா 600 மில்லியன் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டதன் பின்னர் எஞ்சிய ரூபா 200 மில்லியன் நிதியேற்பாடுகளில் 22 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பொலிஸ் தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தளத்தை மேம்படுத்துவதற்காக ரூபா 500 மில்லியனும் கணனி வலையமைப்பைப் மேம்படுத்துவதன் கீழ் 05 செயற்திட்டங்களுக்காக ரூபா 250 மில்லியனுமாக பொலிஸ் திணைக்களத்தின் தகவல் தொழில்நுட்ப மேம்படுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அதில் முதலாவது செயற்திட்டத்தில் ரூபா 500 மில்லியனும் இரண்டாவது செயற்திட்டத்தில் ரூபா 157 மில்லியனுமாக ஆண்டின் இறுதியில் எஞ்சியிருந்தது. பொலிஸ் தகவல் மற்றும் தொடர்பாடல் வலையமைப்பிற்காக மீளாய்வாண்டினதும் முன்னைய இரண்டு ஆண்டுகளிலும் ரூபா 1,775 மில்லியன் நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்திற்காக ரூபா 5 மில்லியன் மாத்திரம் செலவிட்டிருந்தது.

(இ) பொலிஸ் நிலையங்களில் முன்னரங்கு கட்டிடங்கள் நிர்மாணத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 485 மில்லியனான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இவ் செயற்திட்டம் பின்வருமாறு 3 கட்டங்களில் செயற்படுத்தப்பட்டிருந்தது.

| | **கட்டம்** | **2016 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடு** | **2016 ஆம் ஆண்டில் செலவு** | **செலவினத்தின் சதவீதம்** |
|---|---|---|---|---|
| | | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | |
| 1 | 177 கட்டிடங்கள் | 50 | 1.71 | 3.42 |
| 2 | 300 கட்டிடஙகள் | 285 | 152.12 | 53.38 |
| 3 | 75 கட்டிடங்கள் (விசேட அதிரடிப்படையிடமிருந்து கிடைத்த) | 150 | 105.20 | 70.13 |
| | **மொத்தம்** | **485** | **259.03** | **53.41** |

(ஈ) 2014 ஆம் ஆண்டின் போது சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருந்த அந்த முன்கலவை கட்டிடங்களின் பகுதிகளை பயன்படுத்தி பூர்த்தி செய்வதற்கு குறித்த கட்டிட செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா 2,542.80 மில்லியனாக இருந்தது. 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் மொத்தச் செலவினம் ரூபா 1,647.20 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டுகளிலும் எதிர்பார்க்கப்பட்ட இலக்கை நோக்கி அடையாமை காரணமாக இச்செயற்திட்டத்தை பூர்த்தி செய்தல் தாமதமடைந்து காணப்பட்டது.

## 3.10 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 837 | 469 | 368 |
| (ii) | மூன்றாம் நிலை | 4,301 | 3,226 | 1,075 |
| (iii) | இரண்டாம் நிலை | 88,392 | 74,771 | 13,621 |
| (iv) | ஆரம்ப நிலை | 2,565 | 1,559 | 1,006 |
| | மொத்தம் | 96,095 | 80,025 | 16,070 |

(அ) பொலிஸ் உதவிச் சேவையின் பொலிஸ் மருத்துவ சேவைகள் வட்டாரத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட 11 பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்ப விஷேட நிபுணர் பதவியில் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 45 ஆக இருந்த போதிலும், உள்ளவாறான எண்ணிக்கை 9 ஆக இருந்தது. இதனால் 2014 ஆம் ஆண்டு வரை 24 மணி நேரமும் செயற்பாட்டில் காணப்பட்ட பொலிஸ் வைத்தியசாலையின் ஆய்வுகூட பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொண்ட நேரங்கள் வார நாட்களில் 12 மணித்தியாலங்களும் வார இறுதி நாட்களில் 08 மணித்தியாலயங்கள் வரை மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையால் பரிசோதனை நடவடிக்கைகளை தனியார் நிறுவனங்கள் மூலம் மேற்கொள்வதற்கும் நேர்ந்திருந்தன.